# மேன்மையில் இருந்து




ஆண்டவராகிய இயேசு கிறிஸ்துவின் நாமத்தில் உங்களுக்கு என் வாழ்த்துக்களை தெரிவித்துக் கொள்கிறேன். இந்த கொடிய காலத்தின் மத்தியில் மறுபடியும் உங்களை சந்திப்பதில் மகிழ்ச்சி அடைகிறேன். கர்த்தர் தாமே நம்மை சகல தீமைகளிலிருந்தும் விலக்கி காத்து தமது நித்திய ஜீவ கரையில் சேர்பாராக. இன்று இந்த உலகமே தனக்கு கிருபையாய் கொடுக்கப்பட்டிருக்கிற மேன்மையில் இருந்து விழுந்து கிடக்கிறது. இந்த வீழ்ச்சி ஆதியிலேயே தொடங்கிவிட்டது அவற்றை ஒவ்வொன்றாய் தியானித்தோமானால், நம்முடைய இன்றைய பரிதாபமான நிலையை நாம் புரிந்து கொள்ளலாம்.

முதலாவதாக ஆதியிலே இந்த உலகம் **ஆதியாகமம் 1 ஆம்** அதிகாரத்தில் கூறப்பட்டிருக்கிறபடி சிருஷ்டிக்கப்படும் முன்பதாகவே இந்த வீழ்ச்சி தொடங்கிவிட்டது. இதனை நாம் **எசே 28:12-19 வசனங்களில்**, ஆதி மேன்மையை இழந்துபோன ஒருவனை நாம் காணலாம். ஆம் அவனை தேவன் தம்முடைய பரிசுத்த பர்வதத்தில் வைத்தார், அக்கினி மயமான கற்களின் நடுவே உலாவினான், அவன் ஞானத்தால் நிறைந்தவன், பூரண அழகுள்ளவன், ஆனால் அவனிடத்தில் அநியாயம் கண்டுபிடிக்கப்பட்ட பொழுது, அவனை தம்முடைய பரிசுத்த பர்வதத்திலிருந்து ஆகாதவன் என்று தேவன் தள்ளினார். ஆம் இப்படியாக தள்ளபட்டவன், அன்று தான் தவறு செய்து தண்டிக்கப்பட்டது போல், இன்றும் பலரை தவறு செய்ய வைத்து அவர்களை தேவகிருபையில் இருந்து

விழசெய்கிறான். அதை நாம் **ஆதியாகமம் மூன்றாம் அதிகாரத்திலேயே** காணலாம்.

பிசாசாகிய அவன் ஏவாளை வஞ்சித்து, அதன்மூலம் நம் ஆதி பெற்றோராகிய ஆதாமையும் ஏவாளையும் தங்களுக்கு கொடுக்கப்பட்டிருந்த மேன்மையில் இருந்து விழசெய்தான். வேதாகமும் முழுவதும் தங்களுக்கு மேன்மையான ஒரு வாழ்க்கை தேவனால் அருளப்பட்டிருந்தும் அதை சரியாய் பயன்படுத்திக் கொள்ளாமல் தங்களுடைய மேன்மையில் இருந்து வீழ்ந்தவர் பலர். வாக்குத்தத்தம் பண்ணப்பட்ட கானானை சுதந்தரித்துக்கொள்ள மகிழ்ச்சியோடு, தேவ வல்லமையின் வெளிப்பாடோடு புறப்பட்ட இஸ்ரவேலர், தங்கள் கீழ்ப்படியாமையினால் வனாந்தரத்தில் மாண்டார்கள். இஸ்ரவேலுக்கு முதல் ராஜாவாய் தெரிந்து கொள்ளப்பட்ட சவுல் தனக்கு அருளப்பட்ட மேன்மையை காத்துக்கொள்ளாத படியினால் பல இன்னல்களுக்கு உட்பட்டு மரித்தார். இதுபோல் பழைய ஏற்பாட்டில் பலருடைய வாழ்க்கையும், பல தேசங்களின் / சாம்ராஜ்யங்களின் நிலையையும் நாம் காணலாம்.

புதிய ஏற்பாட்டிலும் பன்னிரண்டு அப்போஸ்தலர்களில் ஒருவனாய் ஆண்டவரால் நேரடியாக ஊழியத்திற்கு அழைக்கப்பட்டு அவரோடு கிட்டத்தட்ட மூன்றரை ஆண்டுகாலம் ஊழியம் செய்தும், ஆண்டவரோடு தங்கி உண்டு உறங்கி நாள்தோறும் அவருடைய கிருபையுள்ள வார்த்தைகளை கேட்கும் பாக்கியத்தை பெற்றிருந்தும் தனக்கு கொடுக்கப்பட்ட மகா மேன்மையான நிலையை ஆற்ப காசுக்காய் இழந்துபோனான் யூதாஸ்காரியோத்து. தங்களுடையதையெல்லாம் தேவனுக்காக அர்ப்பணிக்க நினைத்தும் அதில் ஒரு பங்கை மறைத்து வைத்த அனனியா, சப்பீராளும் ஆதிசபையில், அப்போஸ்தலனாகிய பேதுரு முன்பாக திருச்சபையின் நடுவிலே தங்களின் உயிரை விட்டனர். மேன்மையான சுவிசேஷத்திற்கு கீழ்ப்படிந்து, நித்திய ஜீவனை அடைய பாத்திரராய் எண்ணப்பட்டு இருந்தும் அவர்கள் வாழ்க்கை இவ்விதமாய் முடிந்தது.

இவை எல்லாம் இன்று நாம் இருக்கும் இந்த நிலைக்கு நிழலாட்டமாய், முன்மாதிரியாய் உள்ளது. ஆம் கடந்த 100 ஆண்டுகளில் மற்ற எப்போதும் இல்லாத அளவில் அறிவியல் வளர்ச்சியிலும், தொழில் வளர்ச்சியிலும் ஒரு பெரிய மாற்றத்தை ஏற்பட செய்து, நாம் நம் முன்னோர்களை காட்டிலும் ஒரு மேன்மையான நிலையில் வாழ தேவன் கிருபை செய்தார். மேலும் ஆவிக்குரிய ரீதியிலும் தேவனுடைய வார்த்தை, அவருடைய தயவு எங்கும் பிரசித்தம் ஆயிற்று. சத்திய சுவிசேஷத்தை நான் கேள்விப்படவில்லை என்று ஒருவரும் கூற முடியாதபடி தேவன் வல்லமையான தேவ ஊழியர்களை அனுப்பி அவர்களின் மூலம் தமது வார்த்தையை பூமியில் உள்ள அனைவருக்கும் வெளிப்படுத்தினார். எவ்வளவு அதிகமாய் தேவன் மனிதர்களுக்கு தம்மை வெளிப்படுத்தினாரோ,

அவ்வளவு தூரமாய் மனிதர்கள் அவரை விட்டு விலகினர். அமெரிக்க ஐரோப்பிய நாடுகளுக்கு ஆண்டவர் எவ்வளவோ மேன்மையை கொடுத்திருந்தும், அனைவரும் ஆண்டவருடைய வார்த்தைக்கு விரோதமாகவே செயல்பட்டனர். இந்தியா போன்ற நாடுகளில் மத சுதந்திரம் என்பது பெயரளவில்தான் உள்ளது. உண்மையாய் தேவனை பின்பற்றுவோர் துயரத்திற்கு உள்ளாக்கப்பட்டனர்.

உலக ஞானமும், சொகுசான வாழ்க்கையும், மனிதன் தான் தேவனை மறந்து ஓடச் செய்தது. இந்த உலகத்தை தான் கட்டி அமைப்பதாக மனிதன் நினைக்கிறான். தங்களால் எதையும் செய்ய முடியும் என்று உலக அரசாங்கங்களும் உலக தலைவர்களும் நினைத்தனர். இவையெல்லாம் ஆதியில் வீழ்ந்தவனுடைய சூழ்ச்சியினால் நடைபெறுவதாகும். ஆம் பூமியில் நடைபெறும் ஒவ்வொரு காரியத்திற்கும் காரணம் அன்று ஏவாளை போல் இன்று வாழும் மனிதனும், சத்துருவின் வார்த்தைக்கு செவி கொடுத்து வாழ்வதால்தான். தாங்கள் கிருபையின் காலத்தின் இறுதியில் வாழ்ந்து கொண்டிருக்கிறோம் என்பதை அறிந்திருக்கின்ற விசுவாசிகள், ஏன் தேவ ஊழியர்கள் கூட உலகத்திற்கு ஊழியம் செய்ய போய்விட்டனர். ஆதலால், கிருபையின் காலத்தை தவறவிட்டால், பின்பு பூமியில் வாழ்க்கை எப்படி இருக்கும் என்பதற்கு ஒரு சிறிய முன்னோட்டமாக, இந்த கொடிய கொரோனா காலம் தேவனால் அனுமதிக்கப்பட்டிருக்கிறது.

இவை எல்லாவற்றுக்கும் காரணம், தேவன் நமக்கென்று வைத்திருக்கும் மேன்மையை அறிந்து அதற்கேற்றபடி வாழாமல் உலகத்திற்கு பின்னே நாம் பிஸியாக ஓடிக் கொண்டிருப்பதால், மனுஷராகிய நாம் ஒன்றிணைந்து, அன்று வானளாவ பாபேல் கோபுரத்தை கட்ட முயன்றவர்கள் போல் இந்த உலகத்தை கட்டமைத்து விடலாம், நம்முடைய ஞானத்தால் நோய், பிணி எதுவும் அண்டாதவாறு நம்மை காத்துக் கொள்ளலாம் என்றெல்லாம் நாம் எண்ணியதால். ஆனால் இன்று தேவன் அனைத்தையும் நிலைகுலையச் செய்தார். உலக ஞானம், மருத்துவத் துறையின் முன்னேற்றம் என எதுவும் கொரோனாவை ஒன்றும் செய்யமுடியவில்லை. கடந்த ஒன்றரை ஆண்டுகாலமாக உலகம் எங்கும் கோடிக்கணக்கான மக்கள் நோயினால் பாதிக்கப்பட்டு லட்சக்கணக்கான மக்கள் மாண்டு போயிருக்கிறார்கள்.

பணக்கார நாடு, ஏழை நாடு என எந்த பாகுபாடும் இல்லாமல் எல்லாரும் பாதிக்கப்பட்டுள்ளனர். நோயின் தாக்கம் மட்டுமில்லாமல் அதனால் உண்டாகி கொண்டிருக்கிற நாட்டின் மற்றும் தனி மனித வாழ்வில் உண்டாக்கிய பொருளாதார நஷ்டம் அதிகம். நாளை என்ன நடக்கும் நம்முடைய வாழ்வின் நிலை என்ன, குழந்தைகளின் எதிர்காலம் எப்படி இருக்கும் என்பதெல்லாம் கேள்விக்குறியாகிவிட்டது. நம்முடைய வாழ்க்கையே அதற்கு ஒரு சிறந்த உதாரணம்.

தமிழ்நாட்டில் நாம் அனைவரும் கடந்த வருடம் (2020) மார்ச் மாதம் 22-ஆம் தேதி பிறப்பிக்கப்பட்ட லாக் டவுனில் இருந்து இன்னும் விடுபடவில்லை. இன்னும் எத்தனை நாட்கள் நம் வாழ்க்கை இப்படியாக இருக்கப் போகிறது என்பதும் தெரியவில்லை. கடந்த ஒரு வருடத்தில் எத்தனையோ பேரை நாம் இழந்திருக்கிறோம், அநேக குடும்பங்கள் நிற்கதியாய் இருக்கிறது, அரசாங்கமோ, எந்த தனிமனிதனோ நாளைக்கான எந்த முடிவையும் எடுக்க முடியாதபடி, நாளை என்ன நடக்கும் என்பதை அறியாத சூழ்நிலை இருக்கிறது. நாம் பெற்ற பிள்ளைகளுக்கு அடிப்படையான நல்ல உணவு, கல்வியைக் கூட நம்மால் கொடுக்க முடியவில்லை. பணம் இருக்கிறது எல்லா அறிவியல் முன்னேற்றமும் கட்டமைப்பும் அப்படியே இருக்கிறது. ஆனால் அதனால் நமக்கு ஒரு பிரயோஜனமும் இல்லை. நாம் வீட்டை விட்டு கூட வெளியே செல்ல முடியாதபடி, வாழ்வின் எந்தக் காரியத்தையும் குறித்து சிந்தித்து செயல்பட முடியாதபடி, அடங்கிப் போய் இருக்கிறோம்.

வீண் பெருமை பேசின உலக அரசாங்கங்களும் தலைவர்களும் இன்று அமைதியாகி விட்டனர். தேவன் எப்படிப்பட்ட ஒரு அருமையான வாழ்க்கையை நமக்கு கொடுத்திருக்கிறார், ஆனால் நாம் அதை எவ்வாறு சீரழித்து விட்டோம் என்பதை இப்பொழுதாவது உணர வேண்டும். ஒவ்வொரு தனிமனிதனும், குடும்பமும், சமுதாயமும், மாநிலமும், தேசமும் இந்த முழு உலகமும் அவரின் முன் பணிய வேண்டும். சீரழிந்த நம் வாழ்க்கை மறுபடி சீராகப்படவேண்டும். நியூ நார்மல் என்று சொல்லி, நம் நார்மலான வாழ்க்கையை இழந்துபோனதை மறக்க செய்து, இன்னும் மனம்போல் வாழ நம்மை வஞ்சிக்கும் சத்துருவின் தந்திரத்தை நாம் உணர்ந்து தேவன் நமக்கு பூமியிலும் பரலோகத்திலும் வைத்திருக்கும் மேன்மையான வாழ்வை, ஒவ்வொருவரும் உணர்ந்து மனம் திரும்பவேண்டும். தேவன் இக்கொரோனா காலத்தை, கிருபையின் காலம் முடிவிற்கு ஒரு முன்னோட்டமாக கொடுத்துள்ளார். இதை உணர்ந்து மனம் திரும்பி வருகையில் ஆண்டவரோடு செல்ல நாம் ஆயத்தமாக வேண்டும், மற்றவரையும் ஆயத்தப்படுத்த வேண்டும். இழந்துபோன மேன்மையான வாழ்வை நாம் மறுபடியும் பெறவேண்டும். கிருபையின் காலத்தை இழந்து, ஆண்டவருடைய வருகையில் காணப்படாமல் போய், நியாயத்தீர்ப்பிற்குள்ளாய் கடந்து செல்வோர் நிலைகுறித்து நாம் எண்ணிப்பார்க்கக்கூட முடியாது. எனவே இக்கொடிய காலத்தில் தேவன் கொடுக்கும் கடைசி எச்சரிப்பின் சத்தத்தை கேட்டு மனந்திரும்பி ஆண்டவருடைய வருகையில், தேவ கிருபை இப்பூமியிலிருந்து எடுத்துக் கொள்ளப்படுவதற்கு முன்பாக, அவரது பாதம் சரணடைவோம், ஆமென் அல்லேலூயா.